யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015

# Term Examination, November - 2015

FWC

| தரம் :- 13 (2016) | புள்ளித்திட்டம் | வணகக்கல்வி |
|---|---|---|

## வணகக்கல்வி - I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | 3 | 07) | 3 | 13) | 2 | 19) | 4 | 25) | 2 |
| 02) | 5 | 08) | 5 | 14) | 2 | 20) | 3 | 26) | 4 |
| 03) | 1 | 09) | 5 | 15) | 3 | 21) | 4 | 27) | 1 |
| 04) | 2 | 10) | 3 | 16) | 3 | 22) | 3 | 28) | 5 |
| 05) | 4 | 11) | 1 | 17) | 1 | 23) | 1 | 29) | 2 |
| 06) | 4 | 12) | 5 | 18) | 5 | 24) | 2 | 30) | 4 |

31) அ) விவசாயத்துறை (1 புள்ளி)
ஆ) கைத்தொழில்துறை (1 புள்ளி)

32) அ) பேரினச்சூழல் (1 புள்ளி)
ஆ) உரிமையாளர் / பங்குதாரர் (1 புள்ளி)

33) அ) கொள்கை வட்டிவீதம் (1 புள்ளி)
ஆ) நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் (1 புள்ளி)

34) அ) இடர் / அழிவு (1 புள்ளி)
ஆ) பாதுகாப்பு பெட்டக சேவை (1 புள்ளி)

35) அ) சுய (1 புள்ளி)
ஆ) கட்டுக்கதை, அநாமதேய தொலைபேசி அழைப்பு
அநாமதேய கடிதம் (வேறு பொருத்தமானவை) (2 × ½ = 1 புள்ளி)

36) அ) தலையிடாத் தலைவர்
ஜனநாயகம்
சர்வதிகாரம் (2 × ½ = 1 புள்ளி)
ஆ) கட்டுப்படுத்தல் / செயற்றிறன் மதிப்பீடு (1 புள்ளி)

37) அ) உச்சப்பாவனை (1 புள்ளி)
ஆ) அலகுக்கான பங்களிப்பு (1 புள்ளி)

38) அ) பொருட் பாவனை (1 புள்ளி)
ஆ) மறுகட்டளைக் காலம் (1 புள்ளி)

39) அ) உரிய நேர தந்திரோபாயம் (JIT) (1 புள்ளி)
ஆ) தொகுதி உற்பத்தி (1 புள்ளி)

40)

| நியதி | வேலை உற்பத்தி | பாய்ச்சல் உற்பத்தி |
|---|---|---|
| 1. வெளியீட்டின் அளவு | குறைவு / மிகக்குறைவு | அதிகம் / மிக அதிகம் |
| 2. உற்பத்திப் பொருள் வரிசை | பலவகை | ஒரு தனி உற்பத்திப் பொருள் |

(4 × ½ = 2 புள்ளி)

41) 1. உரிமையாளர் 2. ஊழியர்
3. வாடிக்கையாளர் 4. சமூகம் / மக்கள் (4 × ½ = 2 புள்ளி)

42) ✶ வட்டி வீதம்
✶ ஒதுக்கு வீதம்
✶ திறந்த சந்தை நடவடிக்கை
✶ கழிவு வீதத்தினை மாற்றுதல்
✶ கடன் அளவை வரையறுத்தல்
✶ தார்மீக வேண்டுகோள் (4 × ½ = 2 புள்ளி)

43) அ) கிடையான இணைப்பு (½ புள்ளி)
ஆ) ✶ உற்பத்தி அங்கீகார வணிகம்
✶ உற்பத்திப் பொருள் வணிகம்
✶ வணிக முறைக்கான வணிகம் (3 × ½ = 1½ புள்ளி)

44) அ) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள் (1 புள்ளி)
ஆ) இடைக்கால சட்டகோவையின் பிரதி (1 புள்ளி)

45) ✶ பிரச்சினைகளை இனம் காணல்
✶ மாற்றுத் தீர்வுகளை கட்டியெழுப்புதல்
✶ மாற்று வழிமுறைகளை மதிப்பீடு செய்தல்
✶ சிறந்த மாற்று வழியினை தெரிவு செய்தல்
✶ செயற்படுத்தல் (சரியான ஒழுங்கில் குறிப்பிட்டிருப்பின் 4 விடயங்களுக்கு 2 புள்ளி)

46) ✶ தொழிற்பாட்டு அப்படை
✶ உற்பத்திப் பொருள் அடிப்படை
✶ வாடிக்கையாளர் அடிப்படை
✶ பூகோள அடிப்படை
✶ கலவை அடிப்படை (4 × ½ = 2 புள்ளி)

47) ✶ உற்பத்தி திட்டமிடல்
✶ உற்பத்திப் பொறியியல்
✶ பொருட் கொள்வனவு
✶ ஆராய்ச்சி அபிவிருத்தி
✶ உற்பத்திக் கட்டுப்பாடு (4 × ½ = 2 புள்ளி)

48) ✶ உற்பத்திப் பொருளின் தரத்தினை உயர்த்துதல்
✶ உற்பத்திச் செயல்முறையின் வினைத்திறனை அதிகரித்தல்
✶ உற்பத்திக் கிரயத்தினை குறைத்தல்
✶ புதிய பொருட்கள், சேவைகளை அறிமுகப்படுத்தல்
✶ வளவிரயங்களைக் குறைத்தல்
✶ மிகச் சிறப்பாக நுகர்வோரை திருப்திப்படுத்த முடிதல் (4 × ½ = 2 புள்ளி)

49) ✶ கணனி உதவியுடனான வடிவமைப்பு CAD
✶ கணனி உதவியுடனான உற்பத்தி CAM
✶ கணனியுடன் ஒருங்கிணைந்த உற்பத்தி CIM
✶ கணனி எண்சார் கட்டுப்பாடு - CNC (4 × ½ = 2 புள்ளி)

50) 1. 1840 ஆம் ஆண்டு மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டம்
2. 1890 ஆம் ஆண்டு பங்குடமைகள் கட்டளைச் சட்டம்
3. 2007 ஆம் ஆண்டு கம்பனிகள் சட்டம்
4. 1918 ஆம் ஆண்டு வியாபார பெயர்ப்பதிவு கட்டளைச் சட்டம் (4 × ½ = 2 புள்ளி)

## வணிகக்கல்வி - II

### பகுதி - I

01) (i) (அ) வாடிக்கையாளர் அண்மிய சூழலில் குறிப்பிடப்படுபவர்களாயினும் வாடிக்கையாளர் நிறுவனத்திற்கு வருகை தராவிடில் நிறுவனமும் அதன் உரிமையாளரும் வாழ முடியாது போகுமாதலால் இவர்களது வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் வாடிக்கையாளர்களின் வருகை நிறுவனத்திற்கு முக்கியமானதென்பதனாலேயே, அவர்களை வெளி நபரல்ல என இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. *(2 புள்ளி)*

(ஆ)
- ✶ வாடிக்கையாளர்களின் தேவைகளும், விருப்பங்கள் வேறுபட்டிருத்தல்
- ✶ வாடிக்கையாளர்களின் வருமானங்கள் வேறுபட்டிருத்தல்
- ✶ வாடிக்கையாளர்களின் அறிவு வேறுபட்டிருத்தல்
- ✶ வாடிக்கையாளர்களின் பொழுதுபோக்குகள் வேறுபட்டிருத்தல்

*(4 × ½ = 2 புள்ளி)*

(ii) (அ) உரிமையாளர் - ஒழுங்கமைக்கப்பட்ட கலாச்சாரம்
- ✶ உரிமையாளரின் தூரநோக்கு, நிதிப்பலம், அனுபவம், அறிவு, திறன் என்பவையும்
- ✶ வணிகங்களில் ஒரு உரிமையாளரிடமிருந்து அடுத்தவருக்கு கையளிக்கப்படுகின்ற நம்பிக்கைகள், பெறுமானங்கள், விழுமியங்கள், பழக்க வழக்கங்கள் என்பவை பலங்கள் ஆகும். *(2 × ½ = 1 புள்ளி)*

முகாமையாளர் - அமைப்புமுறை
- ✶ முகாமையாளரின் அறிவு, திறன், அனுபவம் பலங்கள் ஆகும்.
- ✶ அமைப்பு முறை - முகாமையாளரினால் அதிகாரம், வளங்கள் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ள முறைகள், அதிகாரப் பரவலாக்கம், மையப்படுத்தல், திணைக் களப்படுத்தல் என்பவை பலங்கள் ஆகும். *(2 × ½ = 1 புள்ளி)*

(ஆ)

| | |
|---|---|
| மக்கட் சூழல் | - சனத்தொகையில் ஏற்படும் மாற்றம் |
| பொருளியல் சூழல் | - வட்டி வீத மாற்றங்கள் |
| அரசியல்சட்ட சூழல் | - சட்டதிட்டங்கள் இறுக்கமடைதல் |
| விஞ்ஞான தொழில்நுட்ப சூழல் | - புதிய தொழில்நுட்ப வருகைகள் |
| சமூக கலாச்சார சூழல் | - சமூக நடத்தைகளிலான மாற்றம் |
| இயற்கைச் சூழல் | - இயற்கை அனர்த்தங்கள் |
| பூகோள சூழல் | - உலகமயமாக்கல் நடவடிக்கைகள் |

*(4 × ½ = 2 புள்ளி)*

(iii) (அ)
- ✶ நுகர்வோரின் செலவிடக்கூடிய வருமானம் அதிகரித்துச் செல்கின்றமை
- ✶ இலத்திரனியல் வணிக விருத்தி
- ✶ சேவைத்துறை வணிகங்களை ஆரம்பித்தல் இலகு
- ✶ தனிநபர்களின் வாழ்க்கை முறைகள் மாற்றமடைந்து செல்கின்றமை
- ✶ அதிகரித்துச் செல்லும் நவீன தொழில்நுட்ப வசதிகள்
- ✶ உயர்தொழில் சேவைகளிற்கான கேள்வி உயர்வடைதல்
- ✶ உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாக் கருமங்களின் விருத்தி
- ✶ பொழுது போக்கு வசதிகள் அதிகரித்தமை *(4 × ½ = 2 புள்ளி)*

(ஆ)
- ✶ தொட்டுணர முடியாது
- ✶ வழங்குபவரிடமிருந்து பிரிக்க முடியாது
- ✶ களஞ்சியப்படுத்த முடியாது
- ✶ வழங்கப்படும் போது நுகரப்படல் வேண்டும்
- ✶ வழங்குபவரைப் பொறுத்து வேறுபடும்
- ✶ அளவிடப்பட முடியாதது. *(4 × ½ = 2 புள்ளி)*

(iv) **சமூகம்**

- ✶ வேலைவாய்ப்பு
- ✶ வரியினை பின் நிற்காது செலுத்துதல்
- ✶ கழிவுப் பொருள் முகாமைத்துவம்
- ✶ சமூக நலனோம்புச் சேவைகள்
- ✶ பசுமை உற்பத்தி
- ✶ சூழலுக்கு நன்மை பயக்கும் வகையில் செயலாற்றல் *(2 × ½ = 1 புள்ளி)*

**வாடிக்கையாளர்**

- ✶ நியாயமாகவிருத்தல்
- ✶ இழப்புக்களை குறைத்தல்
- ✶ உரிமைகளைப் பாதுகாத்தல் *(2 × ½ = 1 புள்ளி)*

**ஊழியர்கள்**

- ✶ நியாயமான தன்மை
- ✶ சிறந்த ஊழியர் தொடர்பு
- ✶ தொழிற் பாதுகாப்பு
- ✶ சுகாதார வசதிகள் *(2 × ½ = 1 புள்ளி)*

**உரிமையாளர்**

- ✶ நியாயமான உழைப்பினை பெற்றுக் கொடுத்தல்
- ✶ பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல்
- ✶ விளைதிறனாகவும், நேர்மையாகவும் முகாமைத்துவ கருமங்களை நெறிப்படுத்தல்

*(2 × ½ = 1 புள்ளி)*

(v) (அ) மூலதனமும் முயற்சியும்

**ஒற்றுமைகள்**

- ✶ இரண்டுமே உற்பத்திக்கான உள்ளீட்டுக் காரணிகள்
- ✶ இரண்டுமே மனித தேவை, விருப்பங்களை பூர்த்தி செய்வதற்காக உள்ளீடு செய்யப்படுபவை *(2 × ½ = 1 புள்ளி)*

**வேற்றுமைகள்**

| மூலதனம் | முயற்சி |
|---|---|
| ✶ வணிகத்தில் ஈடுபடுத்தப்படும் பணங்களும் ஏனைய வளங்களும் | ✶ உற்பத்திக் காரணிகளை ஒழுங்க மைத்து செயற்படுத்தும் ஆற்றல் |
| ✶ சன்மானமாக வட்டி | ✶ சன்மானமாக இலாபம் |

*(2 × ½ = 1 புள்ளி)*

(ஆ) தூரநோக்கும் இலட்சிய நோக்கும்

ஒற்றுமைகள்

- ✶ இரண்டும் வணிகம் செல்லும் பாதைக்கான புற உருவப்படம்
- ✶ இரண்டிலுமே புறத்தரப்பினர் அக்கறை செலுத்துவர் *(2 × ½ = 1 புள்ளி)*

வேற்றுமைகள்

| | |
|---|---|
| ✶ வணிகம் நீண்ட காலத்தில் அடைய எதிர்பார்ப்பது | ✶ வணிகம் ஏன் இயங்குகின்றது என்ற செயற்பாடுகளின் தொகுதி |
| ✶ இலட்சிய நோக்கினை அடைவதன் மூலமே தூரநோக்கு எட்டப்படும் | ✶ தூரநோக்கினை அடைவதற்கான வழிகாட்டல்களின் தொகுதி |

*(2 × ½ = 1 புள்ளி)*

(மொத்தம் *20* புள்ளிகள்)

02) (i) (அ) இலங்கை முதலீட்டுச் சபை ($BOI$)

முதலீட்டு மூலதனம், வழங்கப்படும் தொழிலின் அளவு உள்நாட்டு அல்லது வெளிநாட்டுச் சந்தைகளுக்காக முன்வைக்கப்படுகின்றது. பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், பயன்படுத்தப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், சூழல் அழுத்தங்கள்

(இருவிடங்கள் குறிப்பிட 2 புள்ளி)

(ஆ) அரசு, தனியார்துறை வணிகங்களுடன் போட்டியிட முன்வருவதனால், அவ் வணிகங்களின் பாவனையாளர்களுக்கு ஏற்படும் தாக்கங்களக,

- ✶ நியாயாமான விலையில் பொருட்கள், சேவைகள் கிடைக்கப் பெறுதல்
- ✶ தரமுயர்ந்த பொருட்களும், சேவைகளும் கிடைக்கப் பெறல்
- ✶ சந்தையினை தனியார் துறையினர் கட்டுப்படுத்துவதனைத் தடுக்க முடிதல்
- ✶ சந்தையில் தட்டுப்பாடின்றி பொருட்கள், சேவைகள் பெற முடிதல்

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

(ii) (அ) 2003 ஆண்டு 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவலர்கள் அதிகாரசபைச் சட்டம்

(½ புள்ளி)

வழங்கொழிந்த சட்டங்களாக,

- ✶ நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
- ✶ விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்
- ✶ நியாயமுறை வியாபார ஆணைக்குழுச் சட்டம் ($3 \times \frac{1}{2} = 1\frac{1}{2}$ புள்ளி)

(ஆ)
- ✶ பண்டத்தில் குறிப்பிட்டுள்ள விலையினை விட கூடுதல் விலைக்கு விற்றல்
- ✶ காலாவதியான பொருள் விற்பனை
- ✶ பண்டங்களை விற்பனை செய்கையில் நிபந்தனைகளை விதித்தல்
- ✶ பண்டத்தின் பொதியில் குறிப்பிட்டுள்ள தகவல்களை அழித்தல், மாற்றுதல், திரிவுபடுத்தல்
- ✶ பண்டத்தை தன்னகத்தே வைத்துக் கொண்டு விற்க மறுத்தல்

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

(iii) (அ)
- ✶ இலங்கை பரீட்சைத் திணைக்களம்
- ✶ குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்
- ✶ ஆட்பதிவுத் திணைக்களம்
- ✶ இலங்கை மத்திய வங்கி
- ✶ குறிப்பிட்ட நாட்டின் தூதுவராலயம் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

(ஆ) **நடைமுறைச் செலவுகள் :-**

அரச சேவையினைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக ஏற்படுகின்ற செலவுகள் நடைமுறை / மீண்டெழும் செலவுகள் எனப்படும்.

உ+ம் :- சம்பளமும் கூலியும், வட்டிச் செலுத்துகை (1 புள்ளி)

**மூலதனச் செலவுகள் :-**

நீண்டகால முதலீட்டுக்காக அரசினால் மேற்கொள்ளப்படும் செலவுகள் மூலதனச் செலவுகள் ஆகும்.

உ+ம் :- பாரிய வீதிகளை அமைத்தல், பாலங்களை கட்டுதல் (1 புள்ளி)

(iv) (அ)
- ✶ செலுத்த வேண்டிய வரிகளை ஒழுங்காக செலுத்துதல்
- ✶ உற்பத்திக்கு உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தல்
- ✶ வேலைவாய்ப்பினை வழங்குதல்
- ✶ அரச கொள்கைகளைப் பின்பற்றுதல்

* மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பங்களிப்புச் செய்தல்
* புதிய பொருட்களைக் கண்டுபிடித்தல்
* சூழலைப் பாதுகாக்கும் முறையில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
* அன்னிய செலாவணியை பெற்றுக் கொள்வதற்கு பங்களிப்புச் செய்தல்
* பிரதேச ரீதியாக வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதன் மூலம் பிரதேச அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்
* வாழ்க்கைத் தர மேம்பாடு *(4 × ½ = 2 புள்ளி)*

(ஆ)
* நிறை தொழில் வாய்ப்பு
* நியாயமான வருமானப் பங்கீடு
* பொருளாதார வினைத்திறன்
* பொருளாதார வளர்ச்சி
* விலை உறுதித் தன்மை
* வெளிவாரியான உறுதித் தன்மை
* தரமான சூழல்
* பொருளாதார உறுதிப்பாடு
* பொருளாதார சுதந்திரம் *(4 × ½ = 2 புள்ளி)*

(v) (அ) பாதுகாப்பு பெறும் உரிமை *(1 புள்ளி)*

(ஆ)
* தரமான பொருட்களை வழங்குவதன் மூலம் நுகர்வோரின் நம்பிக்கையினைப் பெற்றுக்கொள்ள முடியுமாயிருத்தல்
* புரள்வு அதிகரிப்பதன் மூலம் கிடைக்கின்ற இலாபம் அதிகரித்தல்
* ஒரு தரத்திற்கேற்ப பொருட்களை உற்பத்தி செய்வதனால் செலவு குறைவடைதல் *(3 × ½ = 1½ புள்ளி)*

(இ)
* பாதுகாப்பு பெறும் உரிமை - பொருளினால் ஏற்படக்கூடிய தீங்கினை பொருளில் சுட்டிக்காட்டல்
* தகவல் பெறும் உரிமை - தேவைப்படும் தகவல்கள் யாவற்றையும் தடையின்றி வழங்கல் / சுட்டுத்துண்டிடல்
* தெரிவு செய்வதற்கான உரிமை - தாம் செலுத்தும் பணத்திற்கு திருப்தியினை தரக்கூடியவற்றை அவர்கள் தெரிவு செய்தல்
* கவனத்தை ஈர்ப்பதற்கான உரிமை - நுகர்வோரின் முறைப்பாடுகள், மனத் தாங்கல்களை கவனத்தில் எடுத்தல், இவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் முறையினை ஸ்தாபித்தல்
* அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் உரிமை - நுகர்வோரின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள், சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு என்பன தொடர்பில் எத்தகைய இடையூறும் இல்லாது செயற்படல்.
* இழப்பீட்டினைப் பெறும் உரிமை - தமது வணிக செயற்பாட்டினால் நுகர்வோருக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு இழப்பீடு செலுத்த தயாராக இருத்தல்
* நுகர்வோர் கல்விக்கான உரிமை - சுயமாக விழுமியங்களை உருவாக்கி அதன்மூலம் நுகர்வோரை அறிவுடையவராக்கல்
* சுத்தமான சூழலில் வாழ்வதற்கான உரிமை - சூழலுக்கு தீங்கு ஏற்படாதவாறு வணிக நடவடிக்கைகளில் ஈடுபடல் *(3 × ½ = 1½ புள்ளி)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

03) (i) (அ) துவாரகசீலன் (½ புள்ளி)

(ஆ)
- ✶ ஆக்கபூர்வமான தன்மை
- ✶ வணிக வாய்ப்புக்களை இனம் காணல்
- ✶ புத்துருவாக்கம்
- ✶ இடர்களைப் பொறுப்பேற்றல்
- ✶ பிரச்சினைகளைத் தீர்த்தல்
- ✶ அர்ப்பணிப்பு
- ✶ சுய நம்பிக்கை
- ✶ ஏனைய திறன்கள் (3 × ½ = 1½ புள்ளி)

(இ)

| | | |
|---|---|---|
| ஆலோசனை சேவை | - | கைத்தொழில் அபிவிருத்திச் சபை<br>ஏற்றுமதி அபிவிருத்திச் சபை<br>விவசாயத் திணைக்களம் |
| தொழில்நுட்பச் சேவைகள் | - | கைத்தொழில் அபிவிருத்திச் சபை<br>ஏற்றுமதி அபிவிருத்திச் சபை |
| உட்கட்டமைப்பு | - | கைத்தொழில் அபிவிருத்திச் சபை |
| சந்தைப்படுத்தல் | - | ஏற்றுமதி அபிவிருத்திச் சபை<br>வணிக திணைக்களம் |
| நிதிச்சேவை | - | எவையேனும் வங்கிகள் |

(இரு சேவைகள் குறிப்பிட 2 × ½ = 1 புள்ளி)

(இரு நிறுவனங்கள் குறிப்பிட 2 × ½ = 1 புள்ளி)

(ii) (அ) காசோலையொன்றின் பெறுபவரின் பெயர் எழுதப்படும் இடத்தில் "காசு" எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் அது காசுக் காசோலை எனப்படும். (1 புள்ளி)

(ஆ) உடன்படுகின்றேன்
காசுக் காசோலையில் பெறுபவரின் பெயர் குறிக்கப்படாமையால் குறுக்குக் கோடிட முடியாது (1 புள்ளி)

(இ)
- ✶ வழங்கிய காசோலையின் பெறுமானத்தை அறிந்து கொள்ள முடிதல்
- ✶ வழங்கிய திகதியை அறிந்து கொள்ள முடிதல்
- ✶ காசோலையின் இலக்கத்தை அறிந்து கொள்ள முடிதல்
- ✶ நடைமுறைக் கணக்கின் மீதியை அறிந்து கொள்ள முடிதல்

(4 × ½ = 2 புள்ளி)

(iii) (அ) நிலையான வைப்புக்களை ஏற்றல் அவ்வைப்புக்களின் மீது கடன் வழங்கல், முதலீட்டு வசதிகளை வழங்கல் போன்றவற்றை மேற்கொள்வதற்காக நிதிக்கம்பனிகள் சட்டத்தின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் அனுமதிப் பத்திரம் ஒன்றினைப் பெற்று பொதுக்கம்பனி வகையைச் சார்ந்தவை நிதிக்கம்பனிகளாகும். (1 புள்ளி)

உ+ம் :- Alliance Finance co. Ltd.
Central Finance co. Ltd.
L. B. Finance co. Ltd.
The Finance co. Ltd. (ஒரு உதாரணம் 1 புள்ளி)

(ஆ)
- ✶ வணிக நடவடிக்கைகள் தடையின்றி மேற்கொள்ள முடிதல்
- ✶ சிறிய அலகு கொண்ட நாணயங்கள் பெறுமதியுடையனவாக உணரப்படல்
- ✶ பயன்படுத்தல் அலகு
- ✶ வாடிக்கையாளர் திருப்தி (2 × 1 = 2 புள்ளி)

(iv) (அ) ✶ 18 வயதினைப் பூர்த்தி செய்தல்

✶ ஆரம்ப பங்குகளை கொள்வனவு செய்தல்

✶ அமைப்பு அகவிதியில் ஒப்பமிட்டிருத்தல் (2 × 1 = 2 புள்ளி)

(ஆ)

| உற்பத்திப் பொருள் அங்கீகார வணிகம் | உற்பத்தி விரிவாக்கலுக்கான சேர்க்கை |
|---|---|
| ✶ அங்கீகாரம் வழங்குபவரின் உற்பத்திகளைப் பெற்று அதே வியாபாரக் குறியின் கீழ் பொருட்களினை விற்பனை செய்வதற்காக தோன்றும் வியாபாரம் இதுவாகும். | ✶ குறித்த ஒரு பொருள் உற்பத்தியுடன் மிக நெருங்கிய தொடர்புடைய பொருளினை அல்லது பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றுடன் இணைதல் இதுவாகும். |
| ✶ சின்னம் வியாபார குறி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் | ✶ சின்னம், வியாபார குறி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படமாட்டாது |

(2 × 1 = 2 புள்ளி)

(v) (அ) ✶ பல்வேறுபட்ட வைப்புக்களைப் பேணுதல்

✶ கடன் வசதிகளை வழங்குதல்

✶ குத்தகைச் சேவை

✶ நாணயக் கடிதத்தை வழங்கல்

✶ பாதுகாப்பு பெட்டக வசதிகள் வழங்குதல்

✶ அந்நிய செலாவணி கொள்வனவு செய்தலும், விற்பனை செய்தலும்

✶ முகவர் சேவை

✶ சுயமாக செயற்படக்கூடிய வங்கி நடவடிக்கை

✶ கடனட்டை, வரவு அட்டைகளின் சேவை

✶ தொலைபேசி வங்கிச் சேவை

✶ இணைய வங்கிச் சேவை

✶ அடகுச் சேவை

✶ பணம் பரிமாற்று நடவடிக்கை (4 × ½ = 2 புள்ளி)

(ஆ) ✶ கொடுப்பனவுகளை காசோலை மூலம் மேற்கொள்ளலாம்

✶ நேரடி வைப்பக்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி

✶ கணக்கு தொடர்பான கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்

✶ நிலையியற் கட்டளை வசதி (2 × 1 = 2 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04) (i) (அ) காப்புறுதி நிறுவனம் பொறுப்புடையதல்ல (1 புள்ளி)

காரணம் :-

விபத்தபாயக் காப்புறுதியில் காப்புறுதி ஒப்பந்தம் மேற்கொள்ளும் போதும், நட்டம் ஏற்படும் போதும் ஒருவரது பெயரில் சொத்து / வாகனம் இருந்தாலே காப்புறுதி நிறுவனம் நட்டஈட்டினைச் செலுத்த முடியும் என காப்புறுதி செய்யத்தக்க உரிமைத்துவத்தில் குறிப்பிட்டுள்ளது. (1 புள்ளி)

(ஆ)

| காப்புறுதி செய்யக்கூடிய இடர் | காப்புறுதி செய்ய முடியாத இடர் |
|---|---|
| திருட்டுப் பயம் | வயதாதல் |
| பாடகரின் குரல் | பரீட்சைப் பயம் |
| ஊழியர் பொறுப்பு | வாகனத் தேய்வு |
| வாகன விபத்து | இறப்பு |
| கொடுத்த கடன் தொகை | வர்ணம் வெளிறல் |

(சரியான 5 விடயங்களுக்கு 2 புள்ளி
சரியான 3/4 விடயங்களுக்கு 1 புள்ளி)

(ii) (அ) போக்குவரத்து என்பது சாதனங்களை மட்டும் கருதவில்லை. அது பல்வேறு அடிப்படை அம்சங்கள் விருத்தியடைந்து உருவாக்கப்பட்டுள்ள அமைப்பு / சேவையொன்றாக கருதமுடியும் அதாவது போக்குவரத்து சாதனத்துடன் வழி, சக்தி, தரிப்பிடம் ஆகிய அனைத்து அம்சங்களும் இணைந்ததே போக்குவரத்து ஆகும்.
(2 புள்ளி)

(ஆ)
- ✶ பயணத்தில் ஈடுபடும் புகையிரதங்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல்
- ✶ உறங்கல் இருக்கை, குளிரூட்டப்பட்ட பெட்டிகள் என்பவற்றை அதிகரித்தல்
- ✶ தொலைக்காட்சி வசதி
- ✶ பாதுகாப்பு கமராவினைப் பொருத்துதல்
- ✶ பாதுகாப்பான குடிநீர் வசதி
- ✶ கையடக்கத் தொலைபேசியினை மின் ஏற்றும் வசதி
- ✶ நேர வரையறை
- ✶ ஏனைய பொருத்தமான விடைகள் (4 × ½ = 2 புள்ளி)

(iii) (அ)
- ✶ தகவல் வழங்குபவர், பெறுபவர் நேருக்கு நேர் கலந்துரையாடி பின்னூட்டலைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
- ✶ உடடினயான பிரதிபலிப்பினை ஏற்படுத்தும்
- ✶ விளக்கமாக தகவலை வழங்கலாம்
- ✶ தெளிவற்ற விடயங்கள் தொடர்பாக உடடினயாக விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- ✶ அங்க அசைவுகள் மூலம் கருத்தினை வெளிப்படுத்தலாம்.

(4 × ½ = 2 புள்ளி)

(ஆ) தரகர் - கொடுக்கல் வாங்களுக்கு கொள்வனவாளரையும், விற்பனையாளரையும் நேரடியாக தொடர்புபடுத்தி, விற்பனை இடம்பெறச் செய்து இரு தரப்பினரிடமும் தரகுப் பணத்தினைப் பெற்றுக் கொள்ளும் நபர் தரகர் எனப்படுவர். (1 புள்ளி)

தரகு முகவர் - முதல்வருக்கு நன்மை பயக்கும் வகையில் தனது விருப்பத்திற் கேற்ப முதல்வரின் சார்பாகப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், அல்லது விற்பனை செய்தலை மேற்கொண்டு அதற்குரிய தரகுப் பணத்தினைப் பெற்றுக் கொள்ளும் முகவர் தரகு முகவராவர். (1 புள்ளி)

(iv) ✶ வாடிக்கையாளரின் தேவைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் வழங்க முடிதல்
✶ சுயசேவை விற்பனை முறையினை அறிமுகப்படுத்த
✶ வாகனத் தரிப்பிட வசதி
✶ ஏனைய சேவைகளை வழங்கல் (வங்கி, மருத்துவச்சாலை, சிற்றுண்டிச்சாலை)
✶ குளிரூட்டப்பட்ட அமைப்புக்கள் ஆதலால் வாடிக்கையாளரை கவர முடிதல்
✶ போட்டியாளர்களை நீண்டகாலம் தக்கவைக்க முடிதல்
(ஏனைய பொருத்தமான விடைகள்) (4 × 1 = 4 புள்ளி)

(v) (அ) ✶ நேரில் உற்பத்தி
✶ உற்பத்தியில் மிகை அல்லது குறைவு ஏற்படுதல்
✶ உற்பத்திக் கிரயம்
✶ பூகோளமயமாதல்
✶ வகைகளில் வேறுபட்டிருத்தல்
✶ பொருட்களின் மேம்பாடு
✶ வியாபாரத் தடைகள் குறைவாக காணப்படல் (4 × ½ = 2 புள்ளி)

(ஆ) ✶ மேலதிக உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடிதல்
✶ உற்பத்தி செய்ய முடியாத பொருட்களை இறக்குமதி செய்ய முடிதல்
✶ வெளிநாட்டுச் செலாவணியை உழைக்க முடிதல்
✶ சர்வதேச வியாபாரத் தொடர்புகள் வளர்ச்சியடைதல்
✶ நவீன தொழில்நுட்பங்களும் முகாமைத்துவத் தேர்ச்சியும் வளர்ச்சியடைதல்
✶ புதிய சர்வதேச சந்தைகள் உருவாதல்
✶ சர்வதேச ஒத்துழைப்புக்கள் அதிகரித்தல்
✶ அதிகளவான பொருட்களை நுகர்வு செய்ய முடிதல் (4 × ½ = 2 புள்ளி)
(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி - II

05) (i) (அ)

| உள்ளீடுகள் | முகாமைத்துவச் செயற்பாடு | வெளியீடுகள் |
|---|---|---|
| பல்வேறு வளங்கள் | திட்டமிடல் → ஒழுங்கமைத்தல் → நெறிப்படுத்தல் → கட்டுப்படுத்தல் → திட்டமிடல் | நோக்கங்களும் இலக்குகளும் அடையப்பெறல் |

(½ புள்ளி) (½ புள்ளி) (½ புள்ளி) (½ புள்ளி)

(ஆ) திட்டமிடலுக்கு அமைய வளங்களை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தி கட்டுப்பாடுகளை மேற்கொண்டு, வேறுபாடுகள் காணப்படுமிடத்து அவற்றினைத் திருத்தி மீண்டும் திட்டமிடல் அடையப் பெறுதல் மூலம் இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன வாகும். (2 புள்ளி)

(ii) ✶ பற்றாக்குறையான வளங்களின் உச்சப் பயன்பாட்டிற்கு
✶ போட்டிக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கு
✶ முரண்பாடான பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்கு
✶ அக்கறை செலுத்தும் பிரிவினரின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றல்

- ✶ மாறுபடும் வணிக சூழலுக்கு முகம்கொடுக்க வேண்டிய தேவை
- ✶ சமூக பொறுப்புக்களில் திருப்தியினை ஏற்படுத்த
- ✶ சர்வதேச ஒப்பந்த நிபந்தனைகளை நிறைவேற்ற
- ✶ வேலை தொடர்பான வேறுபாடுகளுக்கு முகம் கொடுக்க
- ✶ முறைசாரா வேலை முறைமைகளின் தீமைகளை தவிர்க்க
- ✶ மொத்த தர முகாமை மேம்பாடு (4 × 1 = 4 புள்ளி)

(iii) (அ) ✶ ஆளிடை வகிபாகம்
✶ தகவல் வகிபாகம்
✶ தீர்மான வகிபாகம் (3 × ½ = 1½ புள்ளி)

(ஆ) ✶ **பெயரளவுத் தலைவர்**

உ+ம் :- ✶ சட்டரீதியான ஆவணங்களில் கையொப்பம் இடல்
✶ பிரமுகவர்களை வரவேற்றல்
✶ புதிய கட்டிட திறப்பு விழாக்களில் பங்கெடுத்தல்
✶ ஊழியர்களது இல்ல நிகழ்வுகளில் பங்கெடுத்தல்

✶ **பிரச்சினைகளை கையாளுபவர்**

உ+ம் :- ✶ ஊழியர் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தல்
✶ மூலப்பொருள் தட்டுப்பாட்டு நிலைமைகளுக்கு முகம்கொடுத்தல்
✶ போட்டியாளரது முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை எடுத்தல்

✶ நடுநிலையாளர்

உ+ம் :- ✶ ஊழியர் பிணக்குகளில் பக்கம் சாராமை
✶ புறத்தரப்பினர் உடனான பேரம் பேசுதலில் பக்கம் சாராமை

(iv) எண்ணக்கருத்திறன்

திட்டமிடல் :- தீர்மானம் எடுப்பதற்கு
ஒழுங்கமைத்தல் :- வேலைப்பகிர்வு / வளப்பங்கீடு
நெறிப்படுத்தல் :- தலைமைத்துவம் வகிப்பதற்கு
கட்டுப்படுத்தல் :- இலக்குகள் அடைவதற்கு (4 × ½ = 2 புள்ளி)

மானிடத் திறன்

திட்டமிடல் :- ஊழியர் இயலுமை மதிப்பீடு
ஒழுங்கமைத்தல் :- ஊழியர்களுடன் பணிபுரிய
நெறிப்படுத்தல் :- ஊழியர்களை ஊக்குவிக்க
கட்டுப்படுத்தல் :- ஊழியர் செயற்பாடு மதிப்பீடு (4 × ½ = 2 புள்ளி)

(v) (அ) ✶ குறிப்பான நோக்கங்களையும், குறிக்கோள்களையும் திட்டமிடல் குவிமையப் படுத்தியிருத்தல்
✶ நடைமுறைக்கு சாத்தியமானதாக இருத்தல்
✶ நெகிழ்வுத் தன்மை உடையதாக இருத்தல்
✶ நிறுவனத்தின் சகலமட்ட ஊழியர்களும் விளங்கிக் கொள்ளத்தக்கதாக இருத்தல்
✶ எல்லோருடைய பங்களிப்பினையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்
✶ குறித்த காலவரையறையினைக் கொண்டிருத்தல்
✶ ஏனைய முகாமைக் கருமங்களுக்கு முன் தயார் செய்யப்பட்டிருப்பதுடன், அவற்றுடன் இணைந்து செல்லக்கூடியதாக இருத்தல் (4 × ½ = 2 புள்ளி)

(ஆ) ✶ நிச்சயமற்ற தன்மையையும், மாறுபடும் சூழலையும் எதிர்கொள்ளும் ஆற்றல்
✶ திட்டமிடலானது எல்லோருக்கும் ஒரு வழிகாட்டியாக அமையும்
✶ ஏனைய தொழிற்பாடுகளை முகாமைப்படுத்தல் இலகுவாக இருக்கும்
✶ ஏனைய நிறுவனங்களிலிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
✶ ஒவ்வொரு திணைக்களத்தையும் இலகுவாக முகாமைப்படுத்தலாம்
✶ பிரச்சினைகளை முன்கூட்டியே எதிர்கொள்வதற்கான ஆற்றல்
✶ உள்ளக வெளியக சூழல்களை அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்

*(4 × ½ = 2 புள்ளி)*
*(மொத்தம் 20 புள்ளிகள்)*

*06)* (i) நிறுவனமொன்றின் நோக்கத்தினை செயல்திறனுடனும் பயனுறுதியுடனும் அடைந்து கொள்ளும் வகையில் அந்நிறுவனத்தின் அங்கத்தவர்களிடையே வளங்களைப் பகிர்தல், அதிகாரங்களைக் கையளித்தல், வேலைகளைப் பகிர்தல் என்பன தொடர்பான செயல்முறை ஒழுங்கமைத்தல் எனப்படும். *(2 புள்ளி)*

இத்தகைய ஒழுங்கமைத்தலானது மனித வளங்களுக்கு பதவிகளினைக் கொடுத்து அதிகாரங்கள், பொறுப்புக்களைக் கையளித்து, பௌதீக வளங்களைக் கொண்டு இலக்கு நோக்கி நகரச் செய்வதனால் இவற்றில் ஏற்படும் ஏதாவது பாரபட்சங்கள், அல்லது அதிகார கையளிப்பு தொடர்பான முரண்பாடுகள் மனித வளங்களுக்கிடையில் பிணக்குகளினை தோற்றுவிக்கும் ஆதலால், மிக அவதானமாக இப்பணி நிறைவேற்றப்படல் வேண்டும்.

*(2 புள்ளி)*

(ii) (அ) வேலை ஒன்றை நிறைவேற்றுவது தொடர்பில் குறித்த வேலை தொடர்பான அதிகாரங்களையும் பொறுப்பபையும் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை அதிகார கையளிப்பு என்பதாகும். *(1 புள்ளி)*
ஒழுங்கமைத்தல் கருமம் *(1 புள்ளி)*

(ஆ) ✶ விரைவாக தீர்மானம் எடுக்க முடிதல்
✶ மேல்மட்ட முகாமையாளரின் வேலைப் பள்ளு குறைவடையும்
✶ கீழ்மட்ட ஊழியர்கள் ஊக்குவிப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவர்
✶ மேல்மட்ட முகாமையாளர்கள் முக்கியமான விடயங்களில் அதிக கவனம் செலுத்துவர்
✶ கீழ்மட்ட ஊழியர் வேலைகளை கற்க முடிவதுடன், அவர்களின் பதவி உயர்வுக்கும் வழிவகுக்கும் *(2 × 1 = 2 புள்ளி)*

(iii) (அ) கட்டளைச் சங்கிலி
அமைப்பின் அனைத்து ஊழியர்களும் தொடர்புறும் வகையில் அதிகாரம் தொடர்ச்சியாகப் பாய்ந்து செல்லல் கட்டளைச் சங்கிலி எனப்படும். *(1 புள்ளி)*

(ஆ) கட்டளையின் ஓரினத் தன்மை
ஒரு ஊழியர் ஒரு மேற்பார்வையாளருக்கு அல்லது மேலதிகாரி ஒருவருக்கு மட்டுமே பொறுப்புக்கூறல் எனும் தத்துவம் ஆகும். *(1 புள்ளி)*

(இ) கட்டுப்பாட்டின் விசாலம்
ஒரு முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கைப்படுத்தும் கீழ்மட்ட ஊழியர்களின் எண்ணிக்கை ஆகும். *(1 புள்ளி)*

(ஈ) வகைகூறல்
அதிகாரங்கள், பொறுப்புக்கள் கீழ்நிலை உத்தியோகத்தருக்கு பகிர்ந்தளிக்கும் போது வேலை பெறுபேறு தொடர்பான அறிக்கையினை மேலதிகாரிக்கு சமர்ப்பிக்கும் கடமை இதுவாகும். *(1 புள்ளி)*

(iv) ✶ நிறுவனத்தின் தூரநோக்கினையும், இலக்கினையும் நிறைவேற்றிக்கொள்வதற்காக அனைவரினதும் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு

✶ உயர் சாதனைகளைப் பெறுவதற்காக ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு

✶ பல்வேறு பிரிவுகளில் கருமமாற்றும் ஊழியர்களுடைய வெவ்வேறு கருமங்கள் ஒன்றிணைந்து வழிநடாத்துவதற்கு

✶ பல்வேறு உப பிரிவுகளுடன் தொடர்பாடலை ஏற்படுத்துவதற்கு

✶ நிறுவன கருமங்களை கட்டுப்படுத்துவதற்கு

✶ உதவியாளர்களின் தன்னம்பிக்கையினையும், மனோபலத்தையும் உறுதிப்படுத்துவதற்கு

✶ இறுதி தீர்மானங்களை மேற்கொள்ள

✶ முரண்பாடுகளைத் தீர்க்க. *(4 × 1 = 4 புள்ளி)*

(v) (அ) ஊழியர் சுயவிருபத்திலே உரிய கருமங்களை மேற்கொள்வதற்கு தூண்டப்படல் ஊக்குவித்தல்'' எனப்படும். *(2 புள்ளி)*

(ஆ) நிதிசார் ஊக்குவித்தல்

உ+ம் :- கடன்வசதி *(1 புள்ளி)*

நிதி சாரா ஊக்குவித்தல்

உ+ம் :- உணவு, குடிபானம், சீருடை வசதி *(1 புள்ளி)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

07) (i) நியமங்களை உருவாக்கல்

செயற்பாட்டு விளைவுகளை அளவீடு செய்தல்

வேறுபாடுகளை இனம்காணல்

வேறுபாடுகள் இருப்பின் திருத்துவதற்கான நடவடிக்கைகள்

(நான்கு விடயம் குறிப்பிட 2 புள்ளி

நான்கு விடயம் விளக்க 2 புள்ளி)

(ii)

| உள்ளீடு | செயன்முறை | வெளியீடு |
|---|---|---|
| கட்டிடம்<br>ஊழியர்<br>கோதுமை மா<br>மதுவம்<br>நீர்<br>எரிபொருள்<br>உபகரணங்கள்<br>ஏனையவை | கோதுமை மாவினை கலத்தல்<br>அளத்தல்<br>பாண் தயாரித்தல்<br>தீயில் வாட்டுதல் (*Bake*) | பாண்<br>பணிஸ்<br>கேக்<br>பிஸ்கட் |

*(½ புள்ளி)*

*(4 × ½ = 2 புள்ளி)* *(2 × ½ = 1 புள்ளி)* *(½ புள்ளி)*

(iii) (அ) ✶ பொருட்கள், இயந்திரங்கள் என்பவற்றைப் பயன்படுத்துகின்ற செயற்திறன் அதிகரித்தல்

✶ இடவசதிகளின் மூலம் உச்சப் பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு

✶ பொருட்கள் பயன்படுத்தலின் கிரயத்தை குறைத்துக் கொள்வதற்கு

✶ பொருட்களும் ஊழியர்களும் அசையும் போது ஏறபடக்கூடிய தடைகள் குறைவடைதல்

✶ விபத்துக்கள் குறைவடைதல்

✶ தொடர்பாடல், ஒருங்கிணைத்தல், கண்காணிப்பு என்பன இலகுவாக இருத்தல்

✶ ஊழியர்களின் மனோபவம் அதிகரிக்கும். *(4 × ½ = 2 புள்ளி)*

(ஆ) ✶ உட்கட்டமைப்பு வசதி
✶ மூலப்பொருள் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி
✶ ஊழியர் கிடைப்பனவு
✶ அரச கட்டுப்பாடுகள்
✶ அமைவிடம்
✶ சந்தை வசதி (4 × ½ = 2 புள்ளி)

(iv) (அ) ✶ கிரயம், இலாபம் என்பவற்றை கட்டுப்படுத்தும் கருவி
✶ உற்பத்தி திட்டமிடலுக்கு பயனுடையதாக இருக்கும்
✶ பொருளுக்கு விலையிடலை தீர்மானிக்கக்கூடியது
✶ வருமானம், கிரயம், விலை என்பவற்றில் ஏற்படும் மாற்றங்களை பகுப்பாய்வு செய்ய முடியும்.
✶ பல்வேறு விற்பனை அல்லது உற்பத்தி மட்டங்களில் இலாபம் அல்லது நட்டத்தினைக் காட்ட முடியும்.
✶ வணிகத்தினை ஆரம்பிப்பதற்கும், விரிவுபடுத்துவதற்குமான தீர்மானத்தினை மேற்கொள்ளல்
✶ வணிக வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு (4 × ½ = 2 புள்ளி)

(ஆ) இலாப நட்டமற்ற புள்ளி $= \frac{\text{மொத்த நிலையான கிரயம்}}{\text{அலகொன்றுக்கான பங்களிப்பு}}$ (2 புள்ளி)

(v) உற்பத்தி செயன்முறையானது

உள்ளீடு → செயன்முறை → வெளியீடு

ஆகிய மூன்று கட்டங்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு கட்டங்களிலும் பொருளின் மொத்தத் தரமானது தாக்கத்தினை எற்படுத்தக்கூடியது. எனவே தரத்தினை விருத்தி செய்ய எல்லா கட்டங்களும் விருத்தியாக்கப்படல் வேண்டும்.

(இவ்வாறான பூரண விடைக்கு 4 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளிகள்)

***08)*** (i) **அனுகூலம் :-**

✶ களஞ்சிய செலவு குறைவு
✶ இருப்பு மீதான முதலீடு குறைவடையும்
✶ இம் மூலதனத்தை பிற தேவைகளுக்கு பயன்படுத்த முடிதல்
✶ காசுப் பாய்ச்சல் சிறப்பாக விருத்தியடையும்
✶ இருப்புச் செலவு இன்மை
✶ விரயம் குறைவு
✶ களஞ்சியசாலைக்கான இடத்தினை வேறு தேவைக்கு பயன்படுத்த முடியும்.

(4 × ½ = 2 புள்ளி)

**பிரதிகூலம் :-**

✶ பாதுகாப்பு சரக்கின்மையால் உற்பத்தி தடைப்படும்
✶ உற்பத்தித் தடைப்படுவதனால் வாடிக்கையாளரை இழக்க நேரிடல்
✶ போக்குவரத்துச் செலவு அதிகரித்தல்
✶ மூலப்பொருள் கொள்வனவின் போதான கழிவுகள் கிடைக்காது விடுதல்

(4 × ½ = 2 புள்ளி)

(ii) (அ) நுகர்வோரின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்குப் பொருள் ஒன்றில் அல்லது சேவையொன்றில் காணப்படுகின்ற இயலுமை அல்லது பண்பு தரம் எனப்படும். (2 புள்ளி)

(ஆ) ✶ சிறந்த செயற்பாடு
✶ நீண்டகாலம் நிலைத்திருத்தல்
✶ நம்பிக்கைத் தன்மையினைக் கொண்டிருத்தல்
✶ நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல்
✶ உரிய கருமத்திற்கு பொருத்தமாயிருத்தல்
✶ பாதுகாப்பானதாக இருத்தல் (4 × ½ = 2 புள்ளி)

(iii) (அ) தர உறுதி

உற்பத்தியின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக உற்பத்திச் செயன் முறையின் சகல படிமுறைகளையும் ஒழுங்கான பரிசீலனையுடன் மேற்கொள்வதற்கு எடுக்கின்ற நடைமுறைகள் தர உறுதி எனக் கூறப்படும். (2 புள்ளி)

(ஆ) பூச்சிய வழு

சகல உற்பத்திப் பொருட்களும் பிழையின்றி உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல் பூச்சிய வழு நுட்பமுறை எனப்படும். இதற்காக ஏதேனும் தவறொன்றினைத் தடுக்க முடியாதென்பதை ஏற்றுக் கொள்வதை விடவும் முதல் முறையிலேயே திருத்திக் கொள்வது பூச்சிய வழு நுட்பமுறை மூலம் இடம்பெறுகின்றது. (2 புள்ளி)

(iv) (அ) உற்பத்தித் திறன் $= \frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$ (2 புள்ளி)

(ஆ) ✶ முகாமைத்துவத்தினை வினைதிறனாகப் பயன்படுத்திக் கொள்ளல்
✶ நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளல்
✶ நிதிசார்ந்த, நிதிசாராத ஊழியர் ஊக்குவிப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்
✶ தீர்மானம் எடுத்தலுக்கு ஊழியரது பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளல்
✶ தரவட்டத்தை பயன்படுத்தல்
✶ பொருட்களை மீண்டும் பயன்படுத்துவதற்காக மீள்சுற்று வட்டச் செயற்பாட்டினை மேற்கொள்ளல்
✶ பல்லினத் தன்மை கொண்ட உற்பத்தி (4 × ½ = 2 புள்ளி)

(v) **அனுகூலம் :-**

✶ செயற்திறனும் வினைதிறனும் அதிகரித்தல்
✶ பொருட்களின் தரம் உயர்வடையும்
✶ உற்பத்தி கிரயம் குறைந்து, விலைகுறையும்
✶ உற்பத்தி இயலளவு அதிகரிக்கும்
✶ வீண்விரயங்கள் குறைவடையும்
✶ சாதகமான வேலைச் சூழலொன்று உருவாகும். (4 × ½ = 2 புள்ளி)

**பிரதிகூலம் :-**

✶ பாரியளவிலான முதலீடு தேவைப்படல்
✶ பயிற்சி பெற்ற ஊழியர் இல்லாதிருத்தலும், பயிற்சி செலவு அதிகரித்தலும்
✶ விரைவான தொழில்நுட்ப மாற்றம்
✶ ஊழியர்களுக்கிடையிலான தொடர்புகள் பலவீனமடைதல்
✶ திடீர் தொழில்நுட்ப வீழ்ச்சியும் தவறுகள் ஏற்படுதலும்
✶ சூழல் பிரச்சினைகள் உருவாகுதல். (4 × ½ = 2 புள்ளி)

(மொத்தம் 20 புள்ளிகள்)